# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.

# MCOP. No.146/2024

2026-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19-ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.1 வது** நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாரியம்மாள் | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

**முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். முதல்தகவல்அறிக்கை நகல் ம.சா.ஆ.1, பிரேதகூராய்வுஅறிக்கை நகல் ம.சா.ஆ.2, இறப்புசான்று நகல் ம.சா.ஆ.3, வாரிசுசான்று நகல் ம.சா.ஆ.4, இறந்தவரின் ஆதார்அட்டைநகல் ம.சா.ஆ.5, மனுதாரரின் ஆதார்அட்டைநகல் ம.சா.ஆ.6, என்கணவரின் இறப்புசான்று நகல் ம.சா.ஆ.7, 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவுசான்று நகல் ம.சா.ஆ.8, 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீடுசான்று நகல் ம.சா.ஆ.9, 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் ஓட்டுநர்உரிமம் நகல் ம.சா.ஆ.10, 1ம் எதிர்மனுதாரர் மோட்டார்வாகனஆய்வாளர்அறிக்கை நகல் ம.சா.ஆ.11, மாதிரிவரைபடம் நகல் ம.சா.ஆ.12, குற்றஇறுதிஅறிக்கை நகல் ம.சா.ஆ.13,

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை:**

இறந்துபோன ஆசைத்தம்பி என்மகனாவர். என்மகன் ஓட்டிசென்ற மோட்டார்சைக்கிளின் பதிவுசான்று என்தம்பி மணிவேல் பெயரில் உள்ளது. என்மகனுக்கு ஓட்டுநர்உரிமம் இல்லை என்றால் சரியல்ல. என்மகன்

ஓட்டிசென்ற மோட்டார்சைக்கிளுக்கு காப்பீடு இல்லை என்றால் எனக்கு தெரியாது. என்மகன் ஓட்டிசென்ற வாகனத்திற்கு காப்பீடு சான்று மற்றும் ஓட்டியவருக்கு ஓட்டுநர்உரிமம் இல்லையென்று மோட்டார்வாகன ஆய்வாளர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. விபத்து சமயத்தில் என்மகன் வேப்பந்தட்டையில் இருந்து பெரம்பலூர் வந்தார். எசனை ஏரிக்கரையில் விபத்து நடந்தது. எசனை ஏரிக்கரையில் ரோடு நேராக இல்லாமல் வளைந்து வளைந்து இருக்கும் என்றால் சரிதான். அந்த ரோட்டில் என்மகன் அதிவேகமாகவும், அஜாக்கிரையதாவும் மோட்டார்சைக்கிளிளை ஓட்டிவந்து ரோட்டின் வலதுபுறம் ஏறிவந்து விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. என்மகன் மோட்டார்சைக்கிளை மெதுவாகவும், நிதானமாகவும் ஓட்டிஇருந்தால் வித்து நடந்திருக்காது என்று சொன்னால் சரியல்ல. என்மகன் மாதம் ரூ.30,000/- வருமானம் ஈட்டிவந்தார் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இறப்பதற்கு சுமார் 10 வருடங்களுக்கு முன்பு என்மகனுக்கு கனகாவுடன் திருமணம் ஆனது. என்மகனுக்கு நான் தான் சமைத்து போட்டேன். கனகா தனியாக வசிக்கிறார். அவருக்கு குழந்தைகள் இல்லை. இறந்துபோன மகன் என்னுடைய பராமரிப்பில் இருந்து என்னை கவனித்து வந்தார். எனக்கு ஒரே மகனாவர். எனக்கு வேறு குழந்தைகள் கிடையாது. இறந்துபோனவரின் வருமானத்தை நம்பி நான் இருந்தேன். விபத்து என்மகனின் அஜாக்கிரதை மற்றும் அதிவேகத்தால் ஏற்பட்டதால் 2ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.